**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.74/2022- DW-1**

| | |
|---|---|
| Name | திருமதி.நந்தினி |
| Husband Name | திரு.ஜெயக்குமார் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 03.11.2025.

**பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி:–**

20.08.2018 தேதியிட்ட ஆவண எண்.4880/2018–ன் கிரைய ஒப்பந்த அக்ரிமெண்டின் சான்றளிக்கப்பட்ட இணையதள பதிவிறக்க நகல் **பி.சா.ஆ.1** ஆகும். 13.08.2021 தேதியிட்ட ஆவண எண்.4878/2021 –ன் கிரைய ஒப்பந்த ரத்து பத்திரத்தின் சான்றளிக்கப்பட்ட இணையதள பதிவிறக்க நகல் **பி.சா.ஆ.2** ஆகும். 13.08.2021 தேதியிட்ட ஆவண எண்.4880/2021–ன் கிரைய ஒப்பந்த ரத்து பத்திரத்தின் சான்றளிக்கப்பட்ட இணையதள பதிவிறக்க நகல் **பி.சா.ஆ.3** ஆகும். வில்லங்கசான்றிதழ் இணையதள பதிவிறக்க நகல் **பி.சா.ஆ.4** ஆகும். வழக்கை தள்ளுபடி செய்யுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

பி.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப் பத்திரம் குடியிருக்கும் வீடு சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். சந்திரகேசன், தினகரன், என் கணவர் ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் பி.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. பி.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப் பத்திரத்தில் நான் எத்தனை கையெழுத்துகள் போட்டேன் என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த கிரைய ஒப்பந்தப் பத்திரத்தில் கண்டுள்ள வீடு என் அம்மா எனக்கு தானபத்திரம் மூலம் கொடுத்த வீடு ஆகும். தானபத்திரம் மூலம் காலி மனையாக கொடுக்கப்பட்டதா அல்லது வீடாக கொடுக்கப்பட்டதா என்றால் வீடாக தான் கொடுத்தார். என் அம்மா தானபத்திரம் கொடுத்த பிறகு எத்தனை வருடங்கள் கழித்து பி.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. என்னுடன் பிறந்தவர்கள் 2 பேர். நான் மூத்தவர். என் கணவர் வாகன ஓட்டுநராக வேலை செய்து வருகிறார். என் தங்கையின் திருமண செலவிற்காக தான் வீட்டை கிரையம் செய்ய ஒப்பந்தம் செய்தோம் என்றால் சரிதான். கிரையம் ஒப்பந்தம் போட்ட அன்றே அதற்கான தொகையை கிரைய ஒப்பந்தம் போட்டவர் எனக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். தற்போதும் அந்த வீட்டில் தான் நான் குடியிருக்கிறேன். அந்த வீட்டிற்கு குடிநீர் கட்டணம்,

மின்சார கட்டணம், வீட்டு வரி நான் தான் செலுத்தி வருகிறேன். கிரையம் ஒப்பந்தம் போட்டுள்ள விவரத்தை வீட்டு வரி வசூலிப்பவரிடம் நான் சொல்லவில்லை. என் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. என் அம்மா எழுதிக்கொடுத்த தானப்பத்திரத்தை சந்திரகேசனிடம் கொடுத்துவிட்டேன். அந்தக் கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை எந்த தேதியில் ரத்து செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. 13.08.2021 அன்று முதல் கிரைய ஒப்பந்தப் பத்திரத்தை ரத்து செய்யப்பட்டு, அதே தேதியில் தினகரனின் மனைவி பெயரில் மீண்டும் ஒரு கிரைய ஒப்பந்தப் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் தேதி முடிந்துவிட்டது என்று சொல்லி, கையெழுத்து போட என்னை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சந்திரகேசன் என்னை அழைத்து சென்று கையெழுத்து போடவைத்தார். என்ன ஆவணத்தில் கையெழுத்து போட்டேன் என்று நான் படித்துப் பார்க்கவில்லை. 13.08.2021-ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் நானும், என் கணவரும், சந்திரகேசன், தினகரன் ஆகியோர் கையெழுத்து போட்டோம். என் வீட்டின் சந்தை மதிப்பு எனக்கு தெரியாது. 13.08.2021-ம் தேதி கிரைய ஒப்பந்தப் பத்திரம் பதிவு செய்யப்பட்ட போது நான் கேட்டுக்கொண்டபடி மேலும் ரூ.6 லட்சம் வாதி சந்திரகேசன் மூலம் எனக்கு கொடுத்துள்ளார் என்றால் தவறு. அவ்வாறு பணம் எதுவும் கொடுக்கவில்லை. என் தேவைக்காக பணத்தைப் பெற்றுக்கொண்டு, தற்போது கிரைய ஒப்பந்தத்தை நிறைவு செய்ய வாதி அழைத்த போது கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்காமல் வழக்கிற்காக கடன் தான் வாங்கியதாகவும், கிரைய ஒப்பந்தப் பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் பொய் சொல்கிறேன் என்றால் தவறு. வழக்கிற்கு பின்னரும் வாதியிடம் அதிக கிரையப்பணம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி அவருடைய வழக்கில் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:-**</u> இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.